# தேம்பாவணி காட்டும் அசைவுயிர் நிலைபாடு

***முனைவர் ரெ. ரெத்ன ஷீபா மினி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மரியா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வள்ளியூர், திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6407

***முன்னுரை***

*மதம் சார்ந்த பல கருத்துகள் மக்கள் மனதில் எப்போதும் ஆற்றுநீர் போல் ஓடி கொண்டே தான் இருக்கிறது. எம்மதத்தை சார்ந்தவராயினும் மனிதன் மனதில் இருக்க வேண்டியது மனதநேயம் ஒன்றே என்பதை கூறுவதற்காகவே மதங்கள் தோற்றம் பெற்றன. கிறிஸ்தவ மக்களின் இறைவனான கிறிஸ்து பெருமானை மைய கதாமாந்தர்களுள் ஒருவராக கொண்ட தேம்பாவணி நூலில் காணப்படும் அசைவுயிர் நிலைப்பாட்டை பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

### தேம்பாவணி

கிறிஸ்தவர்கள் போற்றும் ஒரு தலைசிறந்த கிறிஸ்தவ காப்பியமான தேம்பாவணி இயேசுநாதரின் வளர்ப்பு தந்தையாகிய சூசையப்பரை (யோசேப்பு, வளன்) தலைவராக கொண்டு பாடப்பட்டது. தேம்பாவணி சூசையப்பர், மரியாள், இயேசு பெருமான் மூவரையும் காப்பிய மைய கதாமாந்தர்களாக கொண்டது.

தேம்பாவணி - தேம்பா அணி எனப் பிரிந்து வாடாத மாலை என்றும் தேபாஅணி எனப் பிரிந்து தேன் போன்ற இனிய பாடல்களின் மாலை என்றும் இதற்கு பொருள் உண்டு. மூன்று காண்டங்களை கொண்டது. ஒவ்வொரு காண்டத்திற்கும் பன்னிரண்டு படலங்கள் என 36 படலங்களால் அமையப்பெற்ற நூல் தேம்பாவணி. (பாடல்கள் - 3615)

இந்நூலை இத்தாலிய நாட்டை சார்ந்த தமிழ் ஆர்வம் கொண்ட வீரமாமுனிவர் அவர்கள் தமிழில் திறம்பட எழுதியுள்ளார்.

### அசைவுயிர்

நிலையுயிர் அல்லாத பிற உயிர்களை அசைவுயிர் என்ற வரையறைக்குள் உட்படுத்தலாம். அசையும் தன்மையுடையன அசைவுயிர்கள். "நிலையுயிர் அல்லாத பிற உயிர்கள் அனைத்தையும் அசைவுயிர் எனலாம். அசைவுயிர் நடப்பன, ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன எனப் பல வகையில் அடங்கும்". (ரெ.ரெத்ன ஷீபா மினி, முனைவர் பட்ட ஆய்வேடு, 2014: 111)

**தேம்பாவணி காட்டும் அசைவுயிர் நிலைப்பாடு**

ஓரறிவு முதல் ஆறறிவு உட்பட்ட அனைத்து உயிரினங்களையும் இக்காப்பியத்தில் திறம்பட புகுத்தியிருக்கும் தன்மை சிறப்புடையது.

தொல்காப்பியர் ஆறறிவு உயிர்கள் பற்றி தொல்காப்பியத்தில் *(2004: 64)*

**“ஒன்றறி வதுவே உற்றறிவதுவே**
**இரண்டறி வதுவே அதனோடு நாவே**
**மூன்றறி வதுவே அதனோடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மனனே”**
**(மரபியல்-நூற்பா - 582,பக்:412)**

என கூறுகிறார்.

**பறவைகள்**

கரும்பு, தேனடை, பனை, பழங்கள், தென்னை, மலர் இவற்றிலிருந்து எழுந்து வந்த மதுவை (தேன்) அழகிய இளம் பறவைகள் உண்டு இனிதாக பாடும் தன்மையுடையன என்பதை நாட்டுப்படலப் பாடல் [பா-23 (1-4)] புலப்படுத்துகிறது.

இளங்குஞ்சுகள் சோர்வுற்று இறக்குமென உணர்ந்த பெட்டை பறவைகள் தன் குஞ்சுகளை இறகுகளால் மூடி நின்று காத்த செய்தியை காட்சிபடலம் [பா-67 (3,4)] நம் கண் முன் கொண்டு வந்து காட்டியுள்ளது.

**மயில்**

கரும்பாலையிலிருந்து நிறைந்து மேல் எழும் கரும்புகையை கார்மேகம் என்று கருதிய மயில் சோலையில் ஆரவார குரல் எழுப்பி துள்ளி ஆடிய செய்தி

“ஆலை யார்புகை முகிலென் றார்ப்பெழச் சோலை யார்மயில் துள்ளி” [பாடல் -19 (1,2)]

எனும் நாட்டுப்படலம் மூலமும் [காட்சி படலம் பா-77 (1,2), காசைசேர் படலம் பா- 9(3,4), பாலமாட்சி படலம் பா-27 (3,4)] மூலமும் தெளி வாகிறது.

மேலும் மயில்கள் ஆடிய செய்தியை குறிப்பிடும் வீரமாமுனிவர் பொருந்துதல் இல்லாத பகைவர் மனம்போல மயில்கள் ஆடியதாகவும் [மகனேந்த படலம் பா- 31 (4)] வண்டின் யாழொலி ஓசைக்கு ஏற்ப மயில்கள் ஆடியதாகவும் [புரோகித படலம் - பா-23(2,3)ஸ குறிப்பிடுகிறார்.

மயில்கள் ஞறாஞறா என்று ஒலி எழுப்பிய செய்தியை பைதிர நீங்கு படலம் [34(2)] மீட்சிப்படலமும் [பா-124 (2)] குறிப்பிடுகிறது

“ஞறாஞறா வெனவொர்பா ளாய்ந்த தோகைகள்” ஐ நாட்டுப்படலம் - பா- 45 (2)ஸ

மூவரையும் அடையாளம் கண்டு கொண்ட மயில் தன் உடம்பில் கண் எனப்படும் கண்ணாடிகள் வெளி பட யாழிசைக்கு ஏற்ப ஆடிய செய்தியை மகனேந்த படலம் மூலம் அறிய முடிகிறது. [பா-40 (2-4)]

சோலைகளும் [பாலமாட்சி படலம் பா-9 (2)] மரபொந்துகளும் மயில்களின் துயிலிடமாக இருந்துள்ளதை சீனயி மாமலை காண் படலம் நமக்கு தெளி வுப்படுத்துகிறது [பா- 28 (1,2)]

கார்த்திகை புவை கண்டு பாம்பென நினைத்த மயில் அதன் மேல் பாய்ந்தது. பொய்யென மறுத்து தன் இனத்து மயில்கள் சிரித்ததாக மீட்சிப் படலம் [பா -53 (2-4)] குறிப்பிடுகிறது.

**குயில்**

**“தேனுண்ட வுவப்பிற் குயிலிரண் டுண்ட**
**தேனுமிழ்ந் தெனத்தமுள் ளிசலிப்”**
**[ஈரறம் பொருந்து படலம் பா-44 (1)]**

இரண்டு குயில்கள் தேனை உண்ட செய்தியை புலப்படுத்துகிறது.

வள்ளம் போன்ற வாயையுடைய குயில் பாடிய ஓசை யாழின் இசையை இகழ்வது போல இருந்ததை ஐயந் தோற்று படலம் பதிவு செய்துள்ளது [பா- 48 (1-4)]

இயேசு பெருமானை கண்ட குயில்கள் இருளை நீக்கிய வேனிற் பருவத்து பகலவனே என மரகொம்புகளில் அமர்ந்து கூவிய நிகழ்வை காட்சிப்படலம் புலப்படுத்துகிறது. [பா -77 (3,4)]

அதே போல் மரஉச்சியை நோக்கி குயில்கள் கூவிய செய்தியை பாலமாட்சி படலம்ஜ பா-10 (1)ஸ மூலமும் தம் பெட்டைகளை அழைப்பதற்காக கூவிய செய்தியை நாட்டுப்படலம் [பா-27 (1,2)] மூலமும் அறிய முடிகிறது.

பாடல் போன்ற மொழி பேசியதாக குயிலின் ஓசை கூறப்பட்டுள்ளது. [காசைசேர் படலம் -பா-4 (2), கருணையன் மாட்சி படலம் பா-145 (2), பாலமாட்சி படலம் - பா-10 (1)]

குயிலின் வருத்தத்தை கூற வந்த வீரமாமுனிவர் இருளை விரும்பும் தீய மக்களை கண்ட மேலோர் போல மாமரத்து குயில்கள் மெலிந்து வருந்தியதாக கூறுகிறார். [நாட்டுப்படலம் - பா -19 (2)]

உலகில் பாவம் மிகுந்த நேரத்தில் தேன் உண்ண கிடைக்காமையால் குயில்கள் பாடுதலின்றி புலம்பியதாக திருமணப் படலம் [பா- 15 (2)], மகனேந்த படலம் [பா- 31 (3)] பாடல் அடிகள் பகர்கின்றன. குயில்களின் துயிலிடமாக மரகொம்புகள் பயன்பட்டமையை தன் படைப்பின் மூலமாக அழகாக விவரிக்கிறார்.. [சீனயி மாமலை காண் படலம் பா - 28 (2), கருணையன் மாட்சி படலம் -பா- 108 (1)]

**காடை**

ஏரோதின் கொடுமைக்கு அஞ்சி மூவரும் நாட்டை விட்டு வெளி யேறுவதை கண்ட காடைகள் கறாகறாவென அழுத நிலையை [பைதிர நீங்கு படலம் பா - 34 (1)]

“கறாகறா வெனவொர்பால் காடைப் புள்ளினம்” [பா- 45 (1)]

நாட்டுப்படலப் பாடலிலும் பைதிர நீங்கு படல பாடலிலும் [பா-34 (1)] காணமுடிகிறது

**அன்னம்**

வயலில் அன்னங்கள் துயிலும் செய்தியை

**“கழனி யோதிமந் துயிலக் கண்டுவாழ்**
**குழவி வாய்நலந் துயில் கொள்”**

**[பாலமாட்சி படலம் பா- 9 (3,4)]**

எனவும் தடாகங்களில் அன்னம் துயிலும் செய்தியை சீனயி மாமலை காண்படலம் [(பா - 28 ( 2)] மூலமும் தெளிவுப்படுத்துகிறார். தாமரையின் மெல்லிய புவாகிய படுக்கையில் அன்னங்கள் வாழ்ந்த செய்தியை கருணையன் மாட்சி படலப் பாடலடிகள் பதிவு செய்கின்றன. [பா- 108 (2,3)]

சூழ்நிலை அறிந்து சூழலுக்கு ஏற்ப அன்னங்கள் பாடிய செய்தியை பாலமாட்சி படலம் [பா - 10 (2)] மூலமும் அன்னங்கள் வருந்தி அழுத செய்தியை பைதிர நீங்கு படலம் மற்றும் [பா-35 (2,3)] பிரிந்த மகவை காண் படலமும் [பா- 45 (1)] புலப்படுகிறது.

நீரை நீக்கி பாலை மட்டும் உண்ணும் தன்மை உடையன அன்னப்பறவைகள். [பாலமாட்சி படலம் பா- 59 (3,4)] அன்னப் பறவையின் இயல்பான தன்மை எடுத்து இயம்பப்பட்டுள்ளது.

**கிளி**

தேன் போன்ற மொழி பேசும் கிளி என கிளியின் இனிமையான ஓசை கூறப்பட்டுள்ளது. [காசைசேர் படலம் பா- 4 (1)] இயேசு பெருமானின் பிறப்பு அறிந்து ஒளியுள்ள கிளிகள் பொருளுள்ள சொல்லால் வாழ்த்து களை பேசியதாக ஒரு செய்தியை எடுத்து கூறுகிறார். [காட்சி படலம் பா-78 (3,4)] மூவரும் சூதேய நாட்டை விட்டு எகித்து நாட்டிற்கு செல்வதைக் கண்டு கிளிகள் அழுததாக

**“கிளிய ழக்குயில் கேட்டழத் தேனுணா”**

**[பா- 35 (1)]**

என பைதிர நீங்கு படலமும் குழந்தையாகிய இயேசு பெருமானை காணாது சூசை அழ அவனோடு சேர்ந்து

கிளிகளும் அழுத செய்தியை பிரிந்த மகவை காண்படலப் பாடலடி [பா -45 (1)] பதிவு செய்கிறது

### புறா

சூதேய நாட்டை விட்டு போகும் மூவரையும் கண்டு புறாக்கள் குறாகுறாவென அழுது தன் வருத்தத்தை வெளிப்படுத்திய செய்தியை பைதிர நீங்கு படல பாடல் [பா- 34 (3)] தெளிவுப்படுத்துகிறது

**"புறவுசேர் வனங்களும் கடந்து போயினர்"**

**[பா - 4 (4)]**

என்ற சீனயி மாமலை காண் படல பாடல் காட்டில் புறாக்கள் கூடி வாழும் பகுதியை மூவரும் கடந்து சென்ற செய்தியை குறிப்பிடுகிறது.

### மைனா

பொன் உருவங் கொண்ட மைனாக்கள் இருந்துள்ளதை [காசைசேர் படலம் பா - 4 ( 1)] அறிய முடிகிறது

### நாரை

தடாகங்களை நாரைகள் உறைவிடமாக பயன்படுத்தியுள்ளன. [சீனயி மாமலை காண் படலம் பா -4 (1)]

நாரைகள் குறித்த செய்திகள் இலக்கியங்களில் பதிவாகியுள்ளது. நாரையை தூதாக பயன்படுத்திய செய்தியை நாரைவிடு தூதில்

**"நாராய் நாராய் செங்கால் நாராய்"**

(நாரைவிடு தூது) என சத்திமுத்த புலவர் பாடுவதன் மூலம் அறிய முடிகிறது.

### காகம்

மற்ற பறவைகளை விட காகம் உணவு கிடைக்கவில்லை எனில் வீடுகளில் கூட சென்று திருடி உண்ணும் பழக்கமுடையது என்பது அனைவரும் அறிந்ததே. இச்செய்தியை கருணையன் மாட்சி படல பாடல் ஜபா - 108 (3)ஸ நமக்கு தெளி வாக விளக்குகிறது.

### கழுகு

**"பாறொடு பற்சிர மீதுப றந்திடவு**
**மாறொடு மாறதி ரத்திரை யார்ந்தனவால்"**

**[கோசுவன் வெற்றி படலம் பா - 31 (2,3)]**

எனும் பாடல் வரிகள் யுதர் ஏவிய அம்புபட்டு இறந்தவர்கள் தலைகளை கழுகுகள் தூக்கி சென்று உணவாக்கியமை குறிப்பிடப்பட்டுள்ளது.

### காட்டுகோழி

காட்டு கோழிகள் தன் உறைவிடமாக மலை சரிவுகளை பயன்படுத்தியுள்ளது.

**[காசைசேர் படலம் பா - 6 (2)]**

### விலங்குகள்

### யானை

இடிக்கு பயந்து அஞ்சும் பெண் யானையை ஆதரவாய் ஆண் யானை தாங்கிய நிகழ்வும் [மீட்சிப்படலம் பா - 18 (2,3), காட்சிப்படலம் - 67 (1,2)] தன் பெண் யானையை தழுவி கொண்டு ஆண் யானை வெள்ளத்தில் நீந்தி சென்ற நிகழ்வும் [இளவன் மாட்சி படலம் பா-114 (1,2)] விலங்குகளுக்கிடையே இருக்கும் அன்புணர்சியை வெளிப்படுத்துகிறது.

யானைகள் தன்னை போரில் ஈடுபடுத்தி கொண்ட செய்தி பல பாடல்களில் திறம்பட எடுத்து இயம்பப்பட்டுள்ளது. [சேதையோன் வெற்றிப் படலம் பா- 37 (1,2), கோசுவன் வெற்றிப் படலம் பா -35 (1,2), 62 (1) 140 (3), 150 (2), புரோகித படலம் பா-74 (1,2)]

**யானைகள் போரில் தம் திறமையை வெளிப்படுத்தியதை**

**"நிருபர் அணிவென்ற அகளங்கள் மதயானை**
**நிகளங்களோடு நிற்பன அதற்கு"**

**[பா -228 (1)]**

எனும் கலிங்கத்துபரணி பாடல் தெளிவுப்படுத்துகிறது. [பாடல் -246, 280, 292]

யானைக்கு மதம் பிடித்து விட்டால் முழங்கி கொண்டே கண்ணில் பட்டதை எல்லாம் பாழ்படுத்தி விடும் குணமுடையது. மதங்கொண்ட யானைகள் முழங்கிய செய்தி பல பாடல்களில் குறிப்பிடப்படுகிறது. [கோசுவன் வெற்றி படலம் பா-158 (2) சேதையோன் வெற்றிப் படலம் பா-36 (1), மீட்சிபடலம் பா-124 (1)]

### குதிரை

**விடுவிடு விடுபரி கரிக் குழாம்**
**விடும்விடும் என்று ஒலி மிகைக்கவே**
**[பா -405 (2)]**

எனும் கலிங்கத்து பரணி பாடல் குதிரைகள் போரில் பயன்பட்டமை குறித்து கூறுகிறது.

போர் படைகளுள் குதிரை படையும் ஒன்று. குதிரைகள் போரில் தம்மை ஈடுபடுத்தி கொண்டமை குறித்து வீரமாமுனிவர் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். [கோசுவன் வெற்றி படலம் பா -35 (1) 31 (3,4), சேதையோன் வெற்றி படலம் பா-35 (3,4) புரோகித படலம் பா-74 (3,4)]

### எருமை

நிழலில் எருமைகள் தூங்கிய காட்சியை

**"நிழலின் மேதிகள் நீரிற் சங்குகள்"**
**[பாலமாட்சி படலம் பா-9 (1)]**

எனும் பாடல் அழகாக விவரிக்கிறது.

நிமிர்ந்த கொம்புள்ள எருமைகள் ஒன்றோடொன்று மோதுவதால் ஏற்படும் ஓசை மூவரையும் வரவேற்பதாக இருந்ததாக மகனேந்த படலம் [பா-46 (1,2)] பாடல் மூலம் தெளிவுப்படுத்துகிறார்.

எருமைகடாவை வேளாண்மைக்கு அதிகளவில் பயன்படுத்தியுள்ளனர். எருமைகடாவை உழுவதற்காக எழுப்பிய நிகழ்வு மகனேந்த படலத்திலும் ஐபா -48 (1) ஸபிரிந்து போன தன் கன்றை நினைத்து எருமை பால் சொரிந்த நிகழ்வு மகனேந்த படலத்திலும் [பா -50 (2,3)] இடம் பெற்றுள்ளது.

**"பகட்டினா றெளிப்ப**
**வறுக்கு வார்சில குறைந்தவை நீக்குவார் சிலர்"**
**[மகனேந்த படலம், பா - 54 (3,4)]**

நெற்பயிரை விரித்து போட்டு கருநிற எருமைக் கடாக்களை மிதிக்க விட்டுள்ளனர்.

### ஆட்டுகிடாய்

இரண்டு ஆட்டுகிடாய்கள் தீப்பொறி பறக்க ஒன்றோடொன்று சினந்து தாக்கிய நிகழ்வு நாட்டுப்படல பாடல் 2(2,3) மூலமும் மகனேந்த படல பாடல் 46 (1) மூலமும் புலனாகிறது.

ஆட்டுக்கிடாய் போர் என்பது இன்றும் வழக்கில் உள்ள ஒன்றாக இருக்கிறது.

### புலி

உயிர்களை கொன்று உண்பதை கருதி வாழ்பவை புலிகள் ஜகருணையன் மாட்சி படலம் பா-108 (4) ஸஎன்பதன் மூலம் புலிகள் இறந்த உடல்களை உண்ணும் இயல்புடையவை அல்ல என்பதை அறிய முடிகிறது.

### சிங்கம்

**"மீனலங்கொள் மணித்திண்டோள்**
**வீங்கியரித் தேரேறி வேய்ந்தாங் கன்னார்"**
**[புரோகித படலம் பா - 83 (1,2)]**

சிங்கம் பூட்டிய தேர் மீது ஏறி போர் புரிந்தவர் கல்லிட நாட்டார் என்பதை தெளிவுப்படுத்துகிறது.

### குரங்கு

குரங்குகள் இயல்பாகவே கிளைவிட்டு கிளை தாவும் தன்மையுடையன. குரங்குகளின் இயல்பான கிளைவிட்டு கிளைவிட்டு கிளை தாவும் செயலை மகனேந்த படலமும் [பா -14 (2) மீட்சி படலமும் பா- 125 (1)] குறிப்பிடுகிறது.

**"கவிவரி நிபுடமும் கானக் கோழியுஞ்"**
**[காசைசேர் படலம் பா -4 (2)]**

என்ற பாடல் கவி என பெயர் பெறும் அணிஅணியான குரங்குகள் வாழும் மலை சரிவை மூவரும் கடந்து சென்ற நிகழ்வை குறிப்பிடுகிறது.

கவி எனும் குரங்குகள் கூட்டம் கூட்டமாக வாழும் தன்மையுடையன.

குரங்குகள் தன் உறைவிடமாக மாமரத்தை பயன்படுத்தியுள்ளமையை

**"மாவிடை முசுக டுஞ்ச மகளிடை யிரவு துஞ்ச"**

**[சீனயி மாமலை காண் படலம் பா-28 (3)]**

எனும் பாடல் தெளிவுப்படுத்துகிறது.

**பசு**

மூவரும் சூதேய நாட்டை விட்டு செல்வதை கண்டு வருத்தத்தால் பசுக்கள் தன் கன்றுகளை மறந்த நிலையில் உள்ளன. [பைதிர நீங்கு படலம் பா - 36 (4)]

முல்லை நிலம் பசு கூட்டங்களின் வாழ்விடமாகும். [மீட்சி படலம் பா -97 (3,4)]

**மான்**

மூவரின் நிலைகண்டு வருந்தி மான்குட்டிகள் பால் அருந்த மறந்த நிலைக்கு தள்ளப்பட்டன. [பைதிர நீங்கு படலம் பா - 36 (3)].

**மான் வகைகளுள் ஒன்றான கத்தூரி மானை**

**"நவிவரி நகுலமு நாவிப் பிள்ளையுங்"**

**[காசைசேர் படலம் பா - 4 (1)]**

எனும் பாடலில் வீரமாமுனிவர் அறிமுகப்படுத்துகிறார்.

**கீரி**

கீரிகள் மலைசரிவுகளில் வாழ்ந்ததான செய்தியை காசைசேர் படலம் [பா-6(1)] குறிப்பிடுகிறது. கீரியை (கௌமாரீஸ்வரி, 2010:455) குறிக்க நகுலம் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**பூச்சியினங்கள்**

**வண்டு**

வண்டுகள் தாமரையின் குளிர்ந்த இதழ்களை தாமே குடைந்து (மலராத மொட்டு) ஊறிய தேனை உண்ணும் தன்மையுடையனவாக காணப்பட்டன. [மகிழ்வினை படலம் பா-23 (1,2) திருமண படலம் பா - 113 (1)]

வண்டுகளின் ஓசை மகர யாழின் இசை போல இருந்துள்ளதை

**"நிரைதேனறை வண்டொடு பாடுவன"**

**[பா- 78 (2)]**

என காட்சிபடலம் பாடல் மூலம் அறிய முடிகிறது. ஐமகனேந்த படலம் பா-15 (1), மகவருள் படலம் பா- 26 (3,4), கருணையன் மாட்சி படலம் பா-145 (1), காசைசேர் படலம் பா -9 (1), புரோகித படலம் பா-23 (2)]

**"மேவின்மீ தாடிய மிஞிறு விம்மின**
**புவின்மீ தாடிய புதுகண் ணாடியே"**

**[மகனேந்த படலம் பா- 39 (3,4)]**

என்ற பாடல் மூவரின் வருகையை கண்டு மகிழ்சியடைந்த வண்டு மகிழ்ச்சி பெருக்கால் புக்களில் உள்ள தேனை உண்ண விரும்பி இரைந்த செய்தியை எடுத்தியம்புகிறது.

புக்கள் வண்டுகளின் உறைவிடமாக இருந்துள்ளது. [பாலமாட்சிப் படலம் பா-9 (2), சீனயி மாமலை காண் படலம் பா- 28 (1)] புக்களில் உள்ள தேனை அருந்தி அதிலேயே துயிலும் தன்மை வண்டுகளின் இயல்பான குணமாகும்.

மூவரின் துன்ப நிலை கண்டு வண்டுகள் அழுததோடு தேனை உண்ணாமல் தன்னை வருத்தி கொண்டுள்ளன. ஐபைதிர நீங்கு படலம் பா- 38 (2), 35 (2), பிரிந்த மகவை காண் படலம் பா - 45 (2), பைதிரம் நீங்கு படலம் பா- 35 (1,2)]

**தேனீ**

தேனீக்கள் ரீங்காரமிடும் ஒலி வீணையிலிருந்து வரகூடிய ஓசை போன்றும் யாழ் இசை போன்றும் இருந்துள்ளது. [காசைசேர் படலம் பா - 4(2), கருணையன் மாட்சி படலம் பா -145 (1)]

பசுமையான சிறகுள்ள தேனீக்கள் [மகவருள் படலம் பா- 26 (2)] இயேசு நாதர் பிறந்ததை கண்டு வாழ்த்துக்களை பாடின. [காட்சி படலம் பா -78 (2)]

தேனீக்கள் தூய தேனை மட்டுமே உண்டு வாழும் தன்மையுடையவை என்பது கருணையன் மாட்சி படல பாடல் 108 (2) மூலம் தெளிவாகிறது.

### தும்பி

புக்களிடையே மொழி பேசுகின்ற தும்பிகள் வாழும் சோலை வழியாகவும் ஐகாசைசேர் படலம் பா- 4 (3) தும்பிகள் பாடுகின்ற வழிகளை கடந்தும் மூவரும் சென்றனர். [மகவருள் படலம் பா -26 (3)]

### நீர்வாழ்வன

### ஆமை

ஆமை தன் தலையை ஓட்டினுள் சுருக்கி கொள்வது மூவர் வருகையை கண்டு துன்பங்கள் ஒளி ந்து கொள்வது போன்றுள்ளது. [மகனேந்த படலம் பா - 48(3)]

ஆமை தன் தலையை ஓட்டினுள் சுருக்கி கொள்ளுதல் என்பது இயல்பான ஒன்றாகும்.

### மீன்

குளத்தில் கயல் மீன்கள் பாய்ந்து துள்ளிய நிகழ்வை கோசுவன் வெற்றி படலம் பா- 13(2) குறிப்பிடுகிறது.

### சங்கு

சங்குகள் நீரில் உறங்கியதாக பாலமாட்சி படலமும் [பா-9 (2)] மணமுடைய பூக்களை கொண்ட தாழை செடியின் அடியில் உலாவி வாழும் சங்கு ஊர்ந்து சென்று வயலில் முத்தை ஈன்றதை புரோகித படலமும் [பா- 23 (1)] தெளிவுப்படுத்துகிறது

### முடிவுரை

தேம்பாவணி கதைகளம் தமிழரோடு தொடர்புடையதன்று. தமிழர் மரபு சார்ந்த கதையாகவும் அமையவில்லை. தமிழ் சூழலுக்கு ஏற்ப கதையை அமைக்கும் ஆசிரியர் தமிழரோடு தொடர்புடைய கருப்பொருட்களை உட்படுத்தி கதையை திறம்பட எடுத்து கூறியுள்ளார். இயேசு பெருமான் வாழ்வின் இன்ப துன்பங்களில் அசைவுயிர்கள் தன்னையும் ஈடுபடுத்தி கொண்டதாக அழகாக தன் படைப்பில் வீரமாமுனிவர் கூறி சென்றுள்ளார். இச்செய்திகள் மனிதனை போன்று அசைவுயிர்களும் இன்ப துன்பங்களை வெளி படுத்தும் திறன் கொண்டவை என்பதையே புலப்படுத்துகிறது.

அசைவுயிர் இல்லாத ஓர் உலகை நம்மால் நினைத்து பார்க்க முடியாது. அசைவுயிர் இல்லாமல் மனிதனால் தனித்து வாழ முடியாது என்பதை மிக சிறப்பாக தேம்பாவணி இலக்கியம் நம் கண்முன் கொண்டு காட்டியுள்ளது என்பதே உண்மை.

(மூவரும் - சூசை, மரியாள், இயேசு பெருமான்)

### துணை நூற்பட்டியல்

1. எஸ்.கௌமாரீஸ்வரி, கௌரா தமிழ் அகராதி, சாதனா பதிப்பகம், சென்னை, 2013
2. பேராசிரியம், தொல்காப்பியம், சாரதா பதிப்பகம், சென்னை, 2018
3. கழக வெளியீடு, அகநானூறு, களிற்றுயானை நிரை சைவ சித்தாந்த கழகம், சென்னை, மறுபதிப்பு-2009
4. முத்து. இராமமூர்த்தி, கலிங்கத்துப் பரணி, சாரதா பதிப்பகம், சென்னை, 2016
5. ரெ.ரெத்ன ஷீபா மினி - சங்க இலக்கியத்தில் நாட்டார் உணவும் மரபு தொடர்சியும் (முனைவர் பட்ட ஆய்வேடு) ம.சு.பல்கலைக்கழகம், 2013
6. https://eegarai.darkbb.com.